முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 554**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.04.2021, திங்கட்கிழமை

1. அருள்பலம் கொண்ட அரங்கா
அறமெனும் சக்திகொண்ட தேசிகா
இருள்நீக்கும் சரவணச்சுடர் ஒளி
ஏழாம் படைவீட்டில் ஏற்றி உலகோரை காக்கும்
2. காக்கின்ற தவசியே அரங்கனே உந்தனுக்கு
கருணைபட சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
தேக்கமின்றி தொடர்ந்து உரைப்பேன்
தேசிகன் வழி உலகம் மாற்றம் பெறும்
3. மாற்றம் தரவல்ல மகா ஞானிநீயப்பா
மக்களைகாக்க வல்ல மகா யோகி நீயப்பா
ஆற்றல்பட உன்னை தொடர்ந்து வந்தாலே
அகிலத்தில் பெருமாற்றம் மக்களுக்கு நிகழும்
4. நிகழவே உந்தனுக்கு நித்தம்நித்தம் சக்திகள்
நிலமதனில் ஞானமாக யான் அருளிவர
புகழ்ந்து உன் நாமஜெபம் போற்றி
பூவுலகில்உன் புண்ணியத்தை உலகோர் செய்து வருக
5. வருகின்ற இந்த அற்புதம் மூலம்
வையகமே ஞானயுகமாற்றம் பெறும்
தருகின்ற உன் தர்மத்தின் அருளமுது மூலம்
தரணியோர்க்கு பிறவாபெரும்பேறு எட்ட நேரும்
6. எட்டுமப்பா அரங்கன் அருளாலே
ஈடேரும் இந்த உலகோருக்கு அழியாமை
கிட்டுமப்பா அரங்கன் உன் தர்மத்தால்
குவலயத்தாரின் பசி பிணி அகன்று பெருமைபட
7. பெருமைபட ஞானவான் என்கின்ற புது அடையாளம்
பிசகில்லாத ஞான ஆட்சிக்காலத்துக்கு உண்டான மாற்றமும்
தகுதிபட அரங்கன் உன் தர்மத்தாலும்
தவசி நீ செய்துவரும் தவத்தாலும் நடந்தேறும்
8. நடந்தேற ஞானபண்டிதன் ஞானமாக துணைநிற்க
நம்பிவரும் மக்கள் மூலம் கலியுகம் மாற்றம் பெறும்
இடர்வெல்லும் யோகியே ஞானியே
ஏழாம்படைவீட்டின் மகா சக்தியே வாழ்கவாழ்க

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.